**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 88/2026** Date: 06.07.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 2** |
| Name | : | R.கோகுல், காவல் உதவி ஆய்வாளர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 06.07.2026.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மொரப்பூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.09.2025 ம் தேதி 11.00 மணிக்கு தருமபுரி மதுவிலக்கு அமல் பிரிவில் நான் பணியிலிருந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் தருமபுரி நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சவுளூர் மார்க்கம் அருகில் கண்காணித்தபோது நடராஜன் என்பவரின் மகன் கார்த்திக் என்பவர் தலா 180 ML அளவுகொண்ட MC Brandy – 26 பாட்டிலை வைத்திருந்தார். அதை பரிசோதித்தபோது அது லேசாக மூடி திறந்த நிலையில் இருந்தது. அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதின்பேரில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் அலுவலில் இருந்து தலைமை காவலர் 868, திரு.ரஞ்சித், பெண் தலைமை காவலர் 543, தமிழ்செல்வி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே மதுபாட்டில்களை கொட்டி அழித்து மகஜர் தயார் செய்து பின்னர் எதிரியுடன் அன்றைய தினம் 12.00 மணிக்கு நிலையம் ஆஜராகி பாரா காவல் வசம் ஒப்படைத்து, மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண். 385/2025, U/s. 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் வழக்கு பதிவுசெய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்.** எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன். விசாரணை முடித்து எதிரி மீது 18.09.2025 ம் தேதி 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

__குறுக்கு விசாரணை__

1. எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் விற்பனை செய்ததற்கான பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் பொதுமக்கள் அதிகம் நடமாடக்கூடிய பகுதி என்றால் சரிதான். சம்பவ இடம் குறித்து நான் தயார் செய்த ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்வில்லை என்றால் சரிதான். எதிரி தன் வசம் வைத்திருந்ததாக சொல்லப்படும் பாட்டில்களில் மது இருந்ததாக எவ்வாறு தெரிந்துக்கொண்டேன் என்றால் அதை நுகர்ந்து பார்க்கும்போது தெரியவந்தது. நான் சொல்வதுபோல் அவ்வாறு கண்டுபிடிக்க முடியாது என்றால் சரியல்ல. மதுவுடன் சேர்த்து மதுபாட்டில்களையும் அழித்துவிட்டோம். மதுபாட்டில்களை அவ்வாறு அழிப்பதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை.

2. பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், யாரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை. நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை என்றும், அவரிடமிருந்து மதுபாட்டில்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றால்போல் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு போலிசாரால் தாக்கல் செய்யப்பட்டு போலிசாரால் விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க புள்ளிவிபர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் தவறாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.07.06 17:46:39 +0530